**12 - ஆம் வகுப்பு**

**நேரம்: 3:00 மணி**

# காலாண்டுத் தேர்வு 2025

## தமிழ்

**மதிப்பெண்கள்: 90**

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-** **14 x 1 = 14**

1. "செம்பரிதி..." எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு ______
   அ) ஒளிப்பறவை ஆ) நிலவுப்பூ இ) சர்ப்பயாகம் ஈ) சூரியநிழல்
2. மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு ______
   அ) மத்தவிலாசம் ஆ) தமிழ்நாட்டு வரலாறு இ) அஞ்சிறைத்தும்பி ஈ) திசை எட்டும்
3. "உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே அஃறிணை என்மனார் அவரல பிறவே", - இந்நூற்பா இடம் பெற்ற இலக்கண நூல் ______
   அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்.
4. "நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது" என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது _
   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்
5. சென்னை வெறும் நகரம் மட்டுமன்று, அது நம்பிக்கை மையம் - காரணம்
   அ) நேரடி மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்.
   ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு,
   இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ அனைத்தும்
6. கடலின் பெரியது ______
   அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
   இ) தினையளவு செய்த உதவி
7. வையகமும் வானகமும் ஆற்றலரிது எதற்கு?
   அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
   இ) தினைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி
8. பொருத்துக:-

| | |
|---|---|
| அ) அன்பும் அறனும் | 1. பண்புத்தொகை |
| ஆ) நன்கலம் | 2. ஆகுபெயர் |
| இ) மறத்தல் | 3. எண்ணும்மை |
| ஈ) உலகு | 4. தொழிற்பெயர் |

   அ) 2,1,4,3 ஆ) 3,1,4,2 இ) 4,2,3,1 ஈ) 1,4,2,3
9. "குடும்பம்" என்னும் சொல் முதன்முதலில் இடம் பெற்றுள்ள நூல் ______
   அ) தொல்காப்பியம் ஆ) திருக்குறள் இ) குறுந்தொகை ஈ) புறநானூறு
10. "இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக" ____என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது.
    அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்.
11. வியர்வை வெள்ளம் - இலக்கணக் குறிப்பு தருக.
    அ) அடுக்குத்தொடர் ஆ) பண்புத்தொகை இ) வினையெச்சம் ஈ) உருவகம்
12. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தெரிவு செய்க:-
    அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும். ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
    இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
    ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.
13. தென்னிந்தியாவின் நுழைவுவாயில் ______
    அ) மதுரை ஆ) சென்னை இ) தூத்துக்குடி ஈ) திருநெல்வேலி
14. "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" எனக் கூறும் நூல் ______
    அ) புறநானூறு ஆ) நற்றிணை இ) குறுந்தொகை ஈ) ஐங்குறுநூறு

## பகுதி - II பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி:-** **2 x 2 = 4**

15. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றி குறிப்பு வரைக.
16. கீழ்த்திசைச் சுவடி நூலகம் குறித்து எழுதுக.
17. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி:-** **3 x 2 = 6**

18. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது - விளக்கம் தருக.
19. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
20. இராமன் சுக்ரீவனிடம் கூறிய செய்திகளை எழுதுக.
21. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப் படுத்துகிறார்?

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடையளி:-** **7 x 2 = 14**

22. கலைச் சொல் தருக:-
    (i) Epigraphy (ii) Nuclear family
23. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து தொடர்களாக ஆக்குக.
    போட்டி வெற்றி பெற்றது. கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.
24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்து கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.
25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    தலை, தளை, தழை
26. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக:-
    குழந்தை, நட, தளிர்நடை, விழு.
27. எவையேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:-
    அ) பொலிந்தான் ஆ) கலங்கி
28. எவையேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:-
    அ) அருங்கானம் ஆ) புதுப்பெயல்
29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:-
    புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.
30. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக:-
    மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

## பகுதி - III பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி** **2 x 4 = 8**

31. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
33. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.
34. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:-** **2 x 4 = 8**

35. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
36. சென்னை அறிவின் நகரம் என்பதைச் சான்றுகளுடன் விளக்குக.
37. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் எழுதுக.
38. மணந்தகம் - விளக்குக.

## பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடைதருக:-** **3 x 4 = 12**

39. இலக்கிய நயம் பாராட்டுக:-

வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைபோல விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

- பாரதியார்

40. "சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும்." - என்னும் குறளில் பயின்று வரும் அணியை எழுதுக. **(அல்லது)** நிரல்நிறை அணி.

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொகுத்தெழுதுக: (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்)
(அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும். (ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

42. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க:-
(i) முன் (ii) தானே

43. ஏதேனும் ஒரு தலைப்பில் புதுக்கவிதை தருக:-
அ) இயற்கை ஆ) கல்வி

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **3 x 6 = 18**

44. (அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

**(அல்லது)**

(ஆ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

45. (அ) "குடும்பம்" என்னும் சிறிய அமைப்பிலிருந்தே "மனித சமூகம்" என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

**(அல்லது)**

(ஆ) நீங்கள் வியந்து பார்த்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

46. (அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

**(அல்லது)**

(ஆ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைத் தொகுத்து எழுதுக.

## பகுதி - V

47. அ. 'துன்பு உளது...' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக. **4 + 2 = 6**
ஆ. 'நன்று'- என முடியும் குறளை எழுதுக.